# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 டிசம்பர் 2002 பகுதி : 12

திங்கள் இதழ்

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 டிசம்பர் 2002 பகுதி : 12

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. இதழ் மணம் ... 419
பதிப்பாசிரியர்

2. வ.உ.சியும் பாண்டித்துரைத் தேவரும் ... 420
வ.உ.சி. பாடற்றிரட்டு

3. உயர்தனிச் செம்மொழி ... 424
பரிதிமாற்கலைஞர்

4. தமிழ் மொழியில் உயிரொலிகளும் மெய்யொலிகளும் வகைப்பாடு ... 427
க.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

5. திருவெம்பாவை - 7 ... 431
பேராசிரியர் சுப.அண்ணாமலை

6. புறநானூற்றில் காணப்பெறும் விறலி ... 434
முனைவர் தி.நெல்லையப்பன்

7. குட்டித்தொல்காப்பியம் ... 440
முனைவர் பெ.சுயம்பு

8. பௌத்த சமய விசாரணை ... 446
ஜெ.எம்.நல்லசாமிபிள்ளை

9. நூல் மதிப்புரை ... 455
இரா.சதாசிவம்

# இதழ் மணம்

இந்த இதழில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் தம் நண்பர் பாண்டித்துரைத்தேவரின் அருங்குண நற்செயல்களைப் போற்றிப்பாடிய அரிய பாடல் ஒன்று முதலில் அணி செய்கிறது.

நூறு ஆண்டுகளுக்குமுன் பரிதிமாற் கலைஞர் நம் செந்தமிழ் இதழில் எழுதிய உயர்தனிச் செம்மொழி செந்தமிழ்மொழி என்பதை வலியுறுத்தி அரசுக்கும் கல்விக் கழகங்களுக்கும் எழுதிய கட்டுரை மீண்டும் தமிழ் மாணவர்கள் பயில வேண்டும் மென்பதற்காக இவ்விதழில் இடம் பெறுகிறது.

பேராசிரியர் க.குழந்தைவேல் பன்னீர் செல்வம் மொழியியல் நோக்கில் எழுதிய தமிழ்மொழியில் உயிர்ரொலிகளும் மெய்யொலிகளும் என்னும் கட்டுரை தமிழ்மாணவர்கள் சிந்தனைக்குரியது.

பேராசிரியர் சுப. அண்ணாமலை திருவெம்பாவை ஏழாம் பாடலுக்கு "என்னே துயிலின் பரிசு" என்ற உணர்வு நிலை விளக்கம் அறிவுக்கு விருந்து.

முனைவர்.தி. நெல்லையப்பனின் சங்ககாலத்தில் பெண்பாற்கலைஞர்களாகிய விறலியர் வாழ்க்கை பண்பாடு பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரை இடம்பெறுகிறது.

சென்ற இதழின் தொடர்ச்சியாக முனைவர் பெ.சுயம்பு அவர்களின் குட்டித்தொல்காப்பியம் வருகிறது.

ஜெ.எம். நல்லசாமி பிள்ளை சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவசித்தாந்தப் பேரறிஞராக விளங்கியவர்கள். ஜி.யூ.போப் போன்ற பேரறிஞர்கள் போற்றிய அறிஞர். அவர்கள் செந்தமிழில் எழுதிய "பௌத்தசமய விசாரணை" என்ற கட்டுரை இடம்பெறுகிறது.

**அறிஞர் பெருமக்கள் செந்தமிழ் இதழில் கட்டுரை எழுதுமாறு வேண்டுகிறோம்.**

**பதிப்பாசிரியர்**

# வ.உ.சியும் பாண்டித்துரைத்தேவரும்

வ.உ.சிதம்பரம்பிள்ளையும் பாண்டித்துரைத் தேவரும் உரிமை நண்பர்கள். வ.உ.சி. நடத்திய கப்பல் கம்பெனியின் தலைவர் பாண்டித்துரைத்தேவர். அதன் செயலர் வ.உ.சி. கப்பல் கம்பெனியில் அதிக மூலதனம் போட்டவர் பாண்டித்துரைத் தேவர். மதுரையில் 1901ல் காங்கிரசு மாநாடு நடத்தியவர் பாண்டித்துரைத்தேவர். உணர்ச்சிதான் நட்பிற்குரிமைதரும்.

எட்டயபுரம் குறுக்குச்சாலையில் திருமந்திர நகரில் சைவசித்தாந்தமாநாட்டினை வ.உ.சி.நடத்தினார். அம்மாநாட்டிற்றுத் தலைமை ஏற்றுப் பாண்டித்துரைத்தேவர் உரையாற்றினார்கள். அக்காலத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் அரசசபையிலேயே விழாக்களை ஏற்பாடு செய்வது வழக்கம். தமிழ் மீதுள்ள காதலின் காரணமாகப் பாண்டித்துரைத்தேவர் தமிழ்ப்புலவர் இல்லங்களுக்கும் தமிழ்க்கூட்டங்களுக்கும் சென்று தமிழைப்போற்றும் வழக்கம் உடையவராக விளங்கினார். அதனை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்த வ.உ.சி.

மதுரையம்பதியில் வண்டமிழ்ச் சங்கம்
இந்நாளாக்கி யிசையுற்ற வள்ளால்!
விரும்பிநன் களிக்கும் மேன்மக்கள் முதல்வ!
இறையென வந்த இன்னுயிர்த்துணைவ!

கற்றவர் விளங்கும் கழகத்தரசே! என்று வ.உ.சி. தம் நண்பராகிய பாண்டித்துரைத் தேவரைப் போற்றிப்பாடும் அரிய திருப்பாட்டு. இதனை மாணவர்கள் ஊன்றிக்கற்று நலம்துய்ப் பார்களாக!

## திருமந்திர நகர் சைவ சித்தாந்த சபையின் இருபத்திரண்டாவது வருட பூர்த்திக் கொண்டாட்ட மகாசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் பொ.பாண்டித்துரைஸாமித் தேவரவர்களை வாழ்த்தி வழுத்திய ஆசிரியப்பா

பூவுல கதனிற் பொருந்துபன் னாட்டில்
தேவரு முனிவருஞ் சிறப்புற் றுறைய
அந்தணர் பசுக்க ளறத்தோடு பெருகச்
சந்தத மின்பந் தழைத்துநனி பொங்கப்
பாண்டிநன் னாட்டிற் பல்வள நிறைந்து
வேண்டிய வெல்லாம் விரைந்துட னளிக்குஞ்
சீலமு நன்மையுஞ் செறிந்து விளங்கும்
பாலவ நத்தப் பதிசெய் தவத்தாற்
சாலவு நல்லறந் தளிர்த்து வளரக்
கால வரம்பின் கணக்கொன் றின்றி
யாண்டுநல் லுயிர்களை யருளொடு புரக்கும்
பாண்டித் துரையெனப் பகர்பே ரரசே!
யாண்டுங் கல்வி யினிதுற மணக்க
ஈண்டு மறுமையு மின்பம் பெருக
மதுரையம் பதியில் வண்டமிழ்ச் சங்கங்
கதியுற நாடாத்துங் கருத்தையுட் கொண்டு
முன்னா ளாக்கிய முடிமன்னர் போல
இந்நா ளாக்கி யிசையுற்ற வள்ளால்!
அன்புடன் கருணை யகத்திடை மருவி
இன்புட னெவரு மென்றும் வாழ
உன்னியிங் கெவர்க்கு மோரரு மருந்தாய்ப்
பின்னிய வறுமைப் பிணியெலா மகல
விரும்பிய வெல்லாம் விரும்பிய வாறே
விரும்பிநன் களிக்கு மேன்மக்கண் முதல்வ!
உலகுக் கெல்லா மொருமுத லாகிப்
பலவகை தோற்றும் பண்பு மரீஇய
கடவுளி னருட்பலன் கருத்துட் கொண்டு
திடமொடு சுகிக்கச் செவ்விதி னல்கும்
பண்பார் சைவப் பயிர்நனி வளர்த்தல்
கண்பார்த் தியற்றுங் கருணையங் கொண்டால்!

முன்ன முவந்து முழுமுதற் கடவுள்
நன்னயம் வழங்கு நந்தா யுமைக்குத்
திருமந் திரத்தைச் செவியுறச் சொற்ற
திருமந் திரமெனுஞ் செய்யவிந் நகரி
லுறையுநன் மாந்த ருய்யும் வண்ணம்
இறையென வந்த வின்னுயிர்த் துணைவ!
இந்நகர் தன்னி லியைவுறு மக்கள்
தந்நல முணர்ந்து சார்ந்தருள் பெற்றிடச்
சைவ நேயராற் றாபித் துள்ள
சைவசித் தாந்த சபையி னிருபத்
திரண்டாம் வயதுமுற் றெய்துங் காலைத்
திரண்ட பலர்க்குந் தேவென நின்று
சைவசித்தாந்தந் தமிழெனு மிரண்டுங்
கைவரப் பெற்ற கனிந்தபிர சங்கஞ்
செய்துநம் மிறையாஞ் சிவனடி யெளிதில்
எய்து நெறியை யினிதுறக் காட்டிய
நன்றியைப் போற்றுதல் நம்பெருங் கடமை
யென்றிங் கியம்பின ரினியவென் னண்பர்;
உற்றவென் கடமையை யுரிமையிற் செய்திட
உற்றன னிங்கே யொருபெரும் பாக்கியம்
பெற்றன னென்ற பெருங்களி யதனால்
கற்றவர் விளங்குங் கழகத் தரசே!
மற்றென் வார்த்தை மதியில தாயினுஞ்
சற்றே கேண்மதி தண்ணருட் டோன்றால்!
பரசுக வடிவாய்ப் பரந்து நிற்கும்
அரனுடை யிலக்கண மான்ம விலக்கணம்
அரனடி யான்மா வடையவொட் டாமற்
பெரிதுந் தடையாய்ப் பிரித்து நிற்கு
மாயையை நீக்கி மாணடி சேர்க்கு
மோன நிலையின் முதிரச் செய்யு
ஞான நிலையு நயம்பட மொழிந்து
மற்று முள்ளநன் மார்க்க மனைத்தும்
பெற்று நிற்கும் பெற்றியை முறைமுறை
யுற்றுநின் றவற்றி னொன்றும் விடாமல்
முற்றுந் திறமையின் மொழிந்து பின்னர்த்
திறம்பெறு தமிழின் சிறப்பெலாந் திரட்டி

யறம்பொரு ளின்ப மனைத்து நல்கிப்
பந்த மகற்றிப் பவமு மகற்றி
அந்தமில் வீடு மளிப்ப ததுவெனா
எத்திறக் கவிஞரு மிங்குமு னியம்பா
அத்திற மாக வணிபெறப் புகன்றே
எம்மனோ ரெவரு மீடேறும் வண்ணஞ்
செம்மை புரிந்த திட்பமென் கூறுவன்?
மன்னர் விரும்பு மதுரைமா நகரின்
முன்ன ரிந்த முழுதுணர் பாண்டியர்
இனிதாந் தமிழை யெழிலுற வளர்த்து
நனியாம் புகழை நாட்டின ரன்றித்
திருவருட் பயனைச் சேரும் வழியை
யொருவருக் காயினு முன்போ லுரைத்ததா
இதுவரை யெவரு மியம்பக் கேட்டிலம்;
அதுவு மன்றி யன்னவ ரயலிடஞ்
சென்றுபந் நியாசஞ் செய்தது மிலையால்
துன்றுசீர்ப் பாண்டித் துரைப்பூ பதிநீ
தமிழும் வளர்த்துச் சைவமும் வளர்த்தே
யமிழ்தினு மினிதா வயலிடஞ் சென்று
பலர்க்கும் பயன்படப் பண்புட னளித்தும்
உலகினி லெவரினு முயர்நிலை யடைந்து
நிலமிசை புகழை நிறுவியும் வீட்டு
நிலமிசை புக்கு நீடித்து வாழப்
பலபடி சாதனம் பண்பினிங் கமைத்துத்
தலைவ னாகுந் தகுதியும் பெற்றாய்
தொன்று தொட்டுத் தூய வழியில்
நின்று கருணை நிதிகொண் மாண்பா
லின்றிவ ணிறையா விசைந்து செய்தநின்
நன்றியை யெழுமையு நாமறக் கிலமே;
அன்றியு நின்னற மவனியின் மீது
நின்று நிலவநீ நீடு வாழ்கச்
சிவனடி மலரைச் சிந்தையில் வைத்துத்
தவமும் புரிந்து தவமுறு வோமே.

வ.உ.சி. பாடற்றிரட்டு, சென்னை, 1914

# உயர்தனிச் செம்மொழி

*-பரிதிமாற்கலைஞர்*

கடல் புடை சூழ்ந்த இவ்வுலகின் கண்ணே பயிலுறும் மொழிகள் அனைத்தையும் ஆராய்ந்து வகுத்து அடைவுபடுத்தி நின்ற மொழி நூற்புலவர்கள் அவையிற்றை ஆரியமொழிகள் துராரிய மொழிகள் என இரு பகுப்பினுட் அடக்குவாராயினர். ஆரிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ் மொழி தலைசிறந்ததொன்றாம். எனவே சமஸ்கிருதமும் தமிழும் வேறு வேறு மொழிகளென்பது வெள்ளிடை மலையென விளங்கும். ஆகவும் சிலர் தமிழ் முன்னதன் வழிமொழியேயன்றித் தனி மொழியன்றென வாய் கூசாது கூறுவாராயினர். சமஸ்கிருதமுந் தமிழும் ஒரே நாட்டின் கண் முறையே வடக்கினுந் தெற்கினுமாக வழங்கிய காரணம் பற்றி இவ்விரண்டுந் தம்மிற் சில்லாற்றாற் கலப்பனவாயின. அங்ஙனங் கலப்புழி ஒன்று பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டில் நிற்ப, மற்றொன்று இருவகை வழக்கிலும் நின்றமையால் முன்னதன் சொற்பொருள்கள் பல பின்னதன் கட்போந்து வழக்கேற்பனவாயின. இது மொழி நூல்முறையே. இதனை யெய்யாதார் கூற்று ஓதுக்கற்பாலதென விடுக்க.

இனி மொழிநூற் புலவர்கள் வகுத்தவகை ஒருபுறமிருப்பச் சிலர் தமிழ் மொழியின் ஏற்ற முணராது மயங்கிப் பிறிதுபட வகுத்தனர். வடமொழியை உயர்தனிச் செம்மொழியினும் (Classical Language) தென் மொழியை உண்ணாட்டு மொழியினும் (Vernacular Languages) அடக்கி வகைப்படுத்தினர். அங்ஙனம் வகைப்படுப்புழி ஒன்று உயர்வும் மற்றொன்று தாழ்வுமாம் என்ற உட்கருத்துடன் படுப்பாராயினர். அவ்வுட்கருத்துச் சின்னாட்களில் வலியுறுவதாயிற்று. தனிமொழியொன்றை அதன் வழிகளோடு வகைப்படுத்தலாமோ? அது முன்னதனை இழிவு படுத்த தாகாதோ? தமிழினை உண்ணாட்டு மொழிகளுட் படுத்ததேயன்றித் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய அதன் வழிமொழிகளோடு ஒரு நிகரெனக் கூறலாமோ? ஆரிய மொழிகளுள் தலைநின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்கு வைத்து எண்ணத் துணியாமை போலத் துராரிய

மொழிகளுள் தலைநின்ற தென்மொழியை அதன் வழிமொழிகளோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியாதிருத்தலே அமைவுடைத்து.

இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வகலா சாலையார் மேற்கூறியாங்குத் தமிழை இழிவுபடுத்தி வகுத்தபோதே, தமிழராயினார் முற்புகுந்து அவ்வாறு வகைப்படுத்தல் சாலாதென மறுத்திருத்தல் வேண்டும். அப்போழ்தெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்துவிட்டனர் நம் தமிழ்மொழியாளர். ஆதலின் இப்போழ்தத்துச் 'சர்வகலாசாலை விசாரணை' (University Commission) யில் தமிழ்மொழிக் கல்வியை யோக்கியதைப் பட்டப் பரீசைகளினின்றும் ஒதுக்கிவிட்டனர். வடமொழி மட்டில் உயர்தனிச் செம்மொழியாதலின் வைத்துக் கொள்ளப்பட்டது.

ஈதென்னை வம்பு! அவ்வுயர்தனிச் செம்மொழி என்பதன் இலக்கணந்தானென்னை? அதனைச் சிறிது ஆராய்வோம். தான் வழங்கும் நாட்டின் கணுள்ள பலமொழிகட்டுகுந் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே உயர்மொழி என்பது இவ்விலக்கணத்தால் ஆராய்ந்தவழி. நம் தமிழ்மொழி தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு, கன்னட, மலையாள, துளுவங்களுக்கெல்லாம் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையால் தானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கு நாட்டில் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கவல்ல ஆற்றல் சான்றதே தனி மொழி எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவிமிக்கும் அவை தனக்குச் செய்யும் உதவிகுறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ்மொழியின் உதவி களையப்படின், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன இயங்குதலொல்லா; மற்று அவையற்றினுதவி களையப் படினும் தமிழ்மொழி சிறிதுமிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையினியங்க வல்லது. இஃது இந்திய மொழி நூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலின் நம் தமிழ்மொழி தனிமொழியே யென்க. இனிச் செம்மொழியாவது யாது? 'திருந்தியபண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம்' என்பது இலக்கணம். இம்மொழி நூல்

இலக்கணம் நம்முடைய தமிழ்மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொல் முடிபுகளும் பொருள் முடிபுகளும் இன்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதின் உணராவற்றாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாசைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறபாசை சொற்களன்றித் தன் சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர்தனித் தமிழ் மொழிக்கும் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழி என்பது ஒருதலை. இதுபற்றியன்றே தொன்றுதொட்டு நம் தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று.

ஆகவே தென்னாட்டின்கண் சிறந்தொளிரா நின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றானாராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது திண்ணம். இத்துணை உயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த நம் அருமைத்தமிழ் மொழியை உண்ணாட்டுப் பன்மொழிகளோடு ஒருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற்போல, தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம். இதனை நமது கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதியவர்களும், சர்வகலா சாலையின் அவயவிகளும் உள்ளவாறே கவனித்து நடப்பார்களாக. இவர்கள் தமக்கு என்றுங்குன்றாப் பழியை விளைக்கத்தக்க செயலிற் புகாது புகழ்பயக்கற்பால நல்லாற்றிற் சென்று நம் தமிழ்மொழியும் உயர்தனிச் செம்மொழி யென்றே கொண்டு ஒழுகுவார்களாக. ஆலவாயிற் பெருமானடிகளாகிய இறையனார் திருவருள் பெற்ற நம் தமிழ் மகள் என்றுந் தலைகவிழாது ஒளிர்க.

# தமிழ் மொழியில் உயிரொலிகளும் மெய்யொலிகளும் வகைப்பாடு

க.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

**முன்னுரை:**

உலகமொழிகள் அனைத்திற்கும் தனித்தனி இலக்கண அமைப்புண்டு. இலக்கியவளம் பெற்றுள்ள மொழிகளுக்கே அன்றி வரிவடிவும் அரிச்சுவடியும் பெறாமல் பேச்சுவழக்கில் மட்டுமே வழங்கிவரும் மொழிகளுக்கும் காலப்போக்கில் பேச்சுவழக்கை இழந்து ஏடுகளிலும் கல்வெட்டுகளிலும் நிலைத்துவிட்ட மொழிகளுக்கும் இது பொறுந்தும். சுருங்கச் சொன்னால் உலகில் வழங்கும் எந்த ஒரு மொழிக்கும் அதற்குரிய இலக்கண அமைப்பு உண்டு. இது மொழியியல் உண்மை. ஆனால், அந்த இலக்கண அமைப்பை முறையாக வரையறுத்துக்கூறும் இலக்கணம் அதாவது இலக்கண நூல் எல்லா மொழிகளுக்கும் இல்லை. இதனைப் பெற்றுள்ள மிகப்பழமையான மொழிகளுள் நமது தமிழ் மொழியே முதலானது - முதன்மையானது.

நூற்றுக்கணக்கான மொழிகளுக்கு வரிவடிவும் பால பாடமும் இந்த நூற்றாண்டில்தான் முதன்முதலில் உருவாயின; இலக்கண நூல்களும் எழுதப்பட்டன. வரிவடிவு பெறாமல், இலக்கணம் காணாமல் ஒலிவடிவிலேயே வாழும் மொழிகள் இன்றும் உண்டு. இந்த மொழியியல் உண்மைகளை எல்லாம் தமிழ்மொழியின் வரலாற்றோடு ஒப்பிட்டு நோக்கினால்தான் தமிழிலக்கண மரபின் தொன்மையும் பெருமையும் புலப்படும்; அதன் செழிப்பும் சிறப்பும் விளங்கும்.

தமிழ் ஒலிகள்:

அகத்தின் கண்ணே எழுகின்ற ஒலிகள் பரை, பைசந்தி, மந்திமை என்பன. எழுத்து புறத்து இசைக்கும் ஒலியை 'கைவரி' என்றும், மெய் தெரிவனியாகிய எழுத்து புறத்து இசைக்கும் கைவரி, காற்றுப் பையிலிருந்து குரல்வளை வழியாக வந்து, வாய் வ்ழியாகவும், மூக்கு வழியாகவும் சென்று பல், நா, அண்ணம் முதலிய உறுப்புகளின் முயற்சியால் பல்வேறு

ஒலிகளாக மாற்றம் பெற்று மொழி ஒலியாக வெளிப்படுகின்றது. இவ்வாறான ஒலிகளை 'உயிரொலிகள், மெய்யொலிகள்' என்று மொழிநூல் வல்லுநர்கள் பகுத்துள்ளனர்.

வாயினை இடமாகக் கொண்டு மெய்யொலிகள் பிறக்கின்றன. குரல்வளையிலிருந்து வெளிப்படும் ஒலிக்கு வாயில் தடை ஏற்பட்டால் மெய்யொலியும், வாயில் தடை ஏற்படாவிட்டால் உயிரொலியாகவும் விளைகின்றன. இந்த மெய்யொலிகளும், உயிரொலிகளும் நா, இதழ், பல், அண்ணம் ஆகிய வாய் உறுப்புகளின் பல்வேறு முயற்சிகளால் ஒலி வடிவங்களைப் பெறுகின்றன.

**உயிரொலிகள்:**

நாவின் உயரம், எழுச்சி, இதழின் முயற்சி ஆகிய மூன்றின் துணையோடு ஒயிரொலிகள் தோன்றுகின்றன. தமிழில் உள்ள உயிரொலிகள் அனைத்தும் ஒலிப்பு ஒலிகளேயாகும். தமிழில் உயிரொலிகள் பொதுவாக நாக்கு பின்னோக்கி எழும் முயற்சியாலும் இதழ் குவிகின்ற முயற்சியாலும் பிறக்கின்றன.

"அ,ஆ, ஆயிரண்டும் அங்காந்து இயலும்" என்கிறார் தொல்காப்பியனார். இகரமும் அங்காப்போடு அண்பல்லை நாக்கின் முதல் நுனி பொருந்துவதால் உண்டாகின்றன. ஈ, ஏ, ஐ எனும் மூன்று உயிர்களும் அங்காப்போடு அண்பல்லை நா முதல் விளிம்பு பொருந்துவதால் உண்டாகின்றன. ஆதலால் இ, ஈ,எ,ஏ,ஐ ஆகிய ஐந்து உயிர்களும் அங்காப்பின் தொடர்புடையன. அதாவது இதழ் குவியாமல் பிறப்பன (Unrounded Vowels) உகரம் ஒகரம் இரண்டு ஒலிகளும் இதழ் குவியும் முயற்சியால் (Rounded Vowels) ஏற்படுகின்றன. ஊ, ஓ, ஔ ஆகிய ஒலிகளும் இதழ் குவிவதால் பிறக்கின்றன இதனை,

**உயிரொலிகள்**

| **அங்காப்பொலிகள்** | **இதழ் குவி ஒலிகள்** |
|---|---|
| ↓ | ↓ |
| **அ,ஆ,இ,ஈ,எ,ஏ,ஐ** | **உ,ஊ,ஒ,ஓ,ஔ** |

**எனப் பிரிக்கலாம்.**

**நாவின் இயக்கத்தினை நாவின் அசையும் நிலை, நாவின் பரந்து வீங்கு நிலை என இரு பகுதிகளாக மொழியியலறிஞர்கள் பிரித்துள்ளனர்.**

**உயிரொலிகள்**

- **நாவின் அசைநிலை**
  - **முன் உயிரொலி**
  - **பின் உயிரொலி**
  - **நடு உயிரொலி**
- **நாவின் பரந்து வீங்கு நிலை**
  - **மேல்**
  - **கீழ்**
  - **இடை**

குறில் ஒலிகளுக்கும், நெடில் ஒலிகளுக்கும் பிறப்பு இயல்பில் வேறுபாடு இல்லை. ஆனால் ஒலிக்கும் அளவில் வேறுபாடுண்டு. மாத்திரையின் அளவின் மிகுதி நோக்கியே இவை நெடில் என நவிலப்படுகின்றன. அகரத்தை ஒலிக்கும் முயற்சியில் சிறிது நீட்டிப்பு ஏற்பட்டால் அது நெடிலாகும். நெடில் மேலும் நீண்டு ஒலித்தால் அது அளபடையாகும்.

"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழுஉதல் என்மனார் புலவர்" - என்று இதனைத் தொல்காப்பியர் குறிக்கிறார்.

மெய்யொலிகள்:

மெய்யொலிகளின் எழுத்து வடிவம் புள்ளி பெற்றிருக்கும். இதனை 'ஒற்றெழுத்து' எனவும் இயம்புவர். மெய்கள் இணைந்து உயிர்க்கும் தன்மை பெற்றவை. இதனை,

"புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருஉரு ஆகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனைஉயிரொடு உருவு திரிந்து உயிர்த்தலும்
ஆயீர் இயல -உயிர்த்தல் ஆறே"

**என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் அறியலாம்.**

**மெய்கள் இணைந்து உயிர்க்கும் தன்மை பெற்றவை என்பதும், "மெய்யின் அளவே அரையென மொழிப" என்றதனால் அவ்வரை மாத்திரையும் தனித்துக் கூறிக்காட்டலாகாது. நாச்சிறிது**

புடைபெயரும் துணையாய் நிற்றலின் இனியதனைச் சிலமொழி மேல் பெய்து காக்கை, கோங்கு, கவ்வை எனக்காட்டுப என்றதனாலும் மெய்யொலி தனித்து ஒலிக்க இயலாது என்பதும் அறியத்தக்கது.

நா நுனி மேனோக்கி அண்ணத்தை ஒற்றவும் வருடவும் பிறக்கும்.

மெய்யொலிகள்

ஒற்றப்பிறப்பவை ↓ ர, ன, ல்

வருடப்பிறப்பவை ↓ ற, ழ, ள்

| | |
|---|---|
| ககரமும் ஙகரமும் | முதல் நா முதல் - அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும் |
| சகரமும் ஙகரமும் | - இடை நா இடை அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும் |
| டகரமும் ணகரமும் | - நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும் |

மெய்யொலிகள் நாவும் இதழும் பொருந்தும் நிலைக்கு ஏற்ப ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. பின்னண்ண ஒலி - க,ங
2. இடையண்ண ஒலி - ச,ஞ
3. நாமடி ஒலி - ட,ண
4. அண்பல் ஒலி - ன,ல(பல் ஈறு அண்பல் எனப்படும்)
5. பல்லின ஒலி - த,ந
6. பல்லிதழினம் - வ
7. இதழொலி - ப,ம

மெய்யொலிகள் யாவும் அவற்றின் தன்மை, வகை, அமைப்பு என்ற நிலைகளில் ஆராயப்படுகின்றன. ஒலிகளின் அமைப்பிற்கேற்ப அதனைத் தடையொலி, உரசொலி, மூக்கொலி, உரப்பொலி, பிரிவொலி வருடொலி என வகைப்படுத்துவர்.

# திருவெம்பாவை 7

*பேராசிரியர் சுப. அண்ணாமலை*

**அன்னே துயிலின் பரிசு!**

திருவெம்பாவை சிவபெருமானிடம் காதல் கொண்ட பெண்களின் பல்வேறு உணர்வுகளையும், அவற்றுக்கு உரிய மெய்ப்பாடுகளையும் சித்திரிக்கிறது. மணிவாசகர் , தமது அனுபவத்தையே இவ்வாறு பிறரின்அனுபவம்போலப் பாடுகின்றார்.

உறக்கமும் அன்று; விழிப்பும்அன்று என்னும் நிலையில் - அவ்விரண்டையும் கடந்த துரிய நிலையில் - படுக்கையிலிருந்து எழாமல் கிடக்கின்றாள் ஒருத்தி. அவளை அழைக்க வருகின்றனர் தோழியர். தம்மைவிட ்அவளுக்கு இறைவனிடம் அன்புமிகுதி என அவர்கள் அறிவர். ஆதலால், அவள் எழுந்திராமை கண்டு வியப்படைந்து, “அம்மா, இவ்வாறும் உன்னால் இருக்க முடியுமா?” என்ற கருத்தமைய,

“அன்னே இவையும் சிலவோ?”

என்று வினவுகின்றனர். ‘இறையன்பில் ஆழ்ந்து, அவ்வன்பிற்குப் பொருந்தியவற்றையே நீ செய்வாய். அவனது வழிபாட்டிற்கு உரிய வேளையில் இப்படிப் படுத்திருப்பதும் செய்வாயோ’? என்பது இவ்வினாவின் பொருள்.

அவள் இறைவனிடம் வைத்த ்அன்பால் செய்த செயல்கள் எல்லாம் அவர்கள் நினைவிற்கு வருகின்றன. அவற்றை அவளுக்கு நினைவூட்டும் முகமாகப் பேசத் தொடங்குகின்றனர்.

‘அம்மா’ தேவர்கள் எத்துணையோ பேர்! எத்துணையோ ஆற்றல் வாய்ந்தவர்! அவருள் யாராலும் நினைத்துப் பார்க்கவும் முடியாதவன் சிவபெருமான். அவனை ஒப்பவர் யாரும் இல்லை. ஆயினும், அடியார்க்கு எளியவன் அவன். ஆதலின் அவனது புகழ் மிக உயர்ந்ததாகும்.

“பல அமரர் உன்னற்கு அரியான், ஒருவன் இருஞ்சீரான்”

இவ்விறைவன் உன் காதலன். அவன் புகழை யன்றி வேறு எதுவும் நீ பேச மாட்டாய், கோயிலில் எக்காளம் ஒலிக்கக் கேட்டால், உன்வாய், தானாகச் 'சிவ, சிவ' என்று கூறும். அடியார் கூட்டம், 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனக் கூறத் தொடங்கித் 'தென்னா' என்று கூறும்போது உன் கண்களில் நீர்பெருகும். தீயிடைப்பட்ட மெழுகுபோல் உருகுவாய்.

"சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே
வாய்திறப்பாய்"
"தென்னா என்னா முன்னம் தீசேர்
மெழுகுஒப்பாய்"

உன்னைக் காணுந்தோறும் நாங்களும் இறையன்பு மீதூரப் பெற்று, அவனை நினைந்து உருகி நிற்போமே! 'என் தலைவன்' என்று ஒருத்தியும், 'என் மன்னன்' என்று மற்றொருத்தியும், 'என் இன்னமுது' என்று பிறிது ஒருத்தியுமாகச் சொல்லி மகிழ்ந்தோமே! இப்போதும் எங்கள் நிலை இதுவே. யாம் கூறுவதைக் கேள்! உன் பழைய இயல்பிற்கு ஏற்ப, இறைவனின் திருப்பெயரைப் பல முறையும் கூறி நெக்குருகி நிற்பாயாக! இதை விட்டு இன்னும் நீ துயிலலாமோ?

"என்னானை என் அரையன் இன்னமுது
என்று எல்லோமும்
சொன்னோம்; கேள் வெவ்வேறாய்;
இன்னம் துயிலுதியோ"

என்று கூறுகின்றனர். இவ்வளவிற்கும் அவள் அசையவில்லை எங்கோ தொலைவில் எக்காளம் ஒலிப்பதைக் கேட்டுச் 'சிவசிவ' என்று கூறிய பெண் சிவன் பெயர் கேட்ட கணமே கனிந்துருகி நின்ற பெண்-இவ்வாறு உறங்குகின்றாளே என்று வியந்தனர். இந்த மாறுதலை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அஃது உறக்கம் அன்றோ என்ற ஐயமும் அவர்களுக்குத் தோன்றியது. நாங்கள் கூறியதை யெல்லாம் கேட்டுக்கொண்டு, கல்மனத்துக் கசடர்போல் சும்மா கிடக்கின்றாயா?

"வன்னெஞ்சப் பேதையர் போல்
வாளாகிடத்தியால்"

என்றும் கேட்டுவிடுகின்றனர். இறைவனை எண்ணிய அளவிலே உருகும் மென்மையான உள்ளமும், மிக்க அறிவும் உடைய அவள் இவ்வாறு கிடப்பது முறையோ என்ற பொருளில் இவ்வாறு கேட்கின்றனர். இறைவனை நினைத்து உருகாதவர் - அவன் திருப்பெயரை அன்புடன் கூறாதவர்-கல் மனம் படைத்தவரே; எத்துணைக் கற்றிருந்தாலும் அறிவற்றவரே என்பது அவர்களின் திண்ணமான நம்பிக்கை.

இவ்வாறு கூறிவிட்டு, உடனே நாக்கைக் கடித்துக் கொள்கின்றனர். அன்பு மிக்க பெண்ணை இவ்வாறு பழித்து விட்டோமே என்று வருந்துகின்றனர். இந்தத் தன்மை அவளுக்கு ஒருகாலும் வாராது. ஆதலின், அவள் ஆழ்ந்த உறக்கமே கொண்டிருக்கின்றாள் என்று முடிவுசெய்து,

'என்னே துயிலின் பரிசு!'

என வியந்து உரைக்கின்றனர். இவ்வாறு இறைக் காதல் கொண்ட மகளிரையும் தடுமாறச் செய்த அந்தப் பெண்ணின் உணர்வும் மெய்ப்பாடும் இலக்கியத்தில் 'சாக்காடு' என்ற அவத்தையாகக் கூறப்படும். காதல் மிகுதியால் தன்னை இழந்துவிடும் அவசம் இது.

சின்னங்கள் கேட்பச் சிவன் என்று தன்னையறியாமல் கூறியவள் - தென்னா என்னா முன்னம் கண்ணீர் பெருக்கி உருகிப் பெருகியவள் - இந்த அவசத்தை அடையும் அளவிற்குக் காதலால் கனிந்து நிற்பாளே அன்றி, உலகரைப் போல் உறங்கிக் கிடப்பாளா?

# புறநானூற்றில் காணப்பெறும் விறலி

*முனைவர்: தி. நெல்லையப்பன்*

## முன்னுரை:

விறலி, பாணனின் மனைவி. 'பாடினி' (பொரு.ஆற். 47) 'கிணை மகள்' (சிறு.பாண். 136) 'ஆடு மகள்' (புறம் - 128) 'விறலி' (சிறுபாண்-31) எனப் பல்வேறு பெயர்களால் இலக்கியங்களில் அழைக்கப்படுபவள். பாடுவதிலும் ஆடுவதிலும் வல்லவள். இவளின் இயல்புகளைப் பொருநர் ஆற்றுப்படை (25-47) அடிகளிலும் சிறுபாணாற்றுப்படை (1-33) வரையுள்ள அடிகளிலும் பெரும்பாணாற்றுப்படை 486-ஆம் அடியிலும் மலைபடுகடாம் (36-46) அடிகளிலும் பரக்கக் காணலாம். அதைவிடுத்து, புறநானூற்றில் இருபத்து எட்டு இடங்களில் விறிலி பற்றிய செய்திகள் மொழியப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஈண்டு, விறலியின் தோற்றம், பாடல் வல்லவள், ஆடுமகள், ஆற்றுப்படை நிகழ்வுகள், பண்புநலன், குறித்த செய்திகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

## விறலியின் தோற்றம்:

சோழன் நலங்கிள்ளி குறித்த பாடல் 'கடும்பின் அடுகலம்' எனத்தொடங்கும் கோவூர்கிழார் பாடல். இதில் விறலியின் தோற்ற அழகும் விறலி சூடுவதற்குரிய பூக்களுக்கு விலையாக மாடங்கள் உள்ள மதுரையை அளித்தான் என்றுள்ளதால் விறலியின் தோற்றப்பொலிவை உணரவியலும். அவள் நிறம் பொருந்திய கலவையைத் தீட்டிக்கொண்டாள்;. வளையல் அணிந்த முன்கையினைக் கொண்டவள்; மூங்கில் போன்ற தோளை உடையவள்; ஒளிவீசக்கூடிய நெற்றியைக் கொண்டவள் (புறம் - 32) என்பதால் அறியலாம். இவ்வாறே அதியமான் நெடுமான் அஞ்சி குறித்த ஔவையார் பாட்டில்,

> "இழையணிப் பொலிந்த ஏந்து கோட்டல்குல்
> மடவரல் உண்கண், வாள்நுதல் விறலி" (புறம் - 81)

என்ற விறலியின் தோற்றப்பொலிவு இடம் பெற்றுள்ளது. விறலியின் கூந்தல் பாதிரிமணம் வீசும்; புன்னகை அரும்பும் என்று பாணனைப் பார்த்து கோவூர் கிழார் மொழிவதும் தோற்றப்பொலிவை உணரவைக்கின்றது. வறுமை சூழும்போது அவளின் பொலிவுமாறி வருத்தம் மேலிடும் என்று புறநானூற்றில் சொல்லப்பட்டுள்ளது. இதனை மருதன் இளநாகனார் பாட்டில்,

சுவல் அழுந்த பலகாய
சில்லோதிப் பல் இளைஞருமே
அடிவருந்த நெடிது ஏறிய
கொடிமருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டி..... (புறம் - 139)

என்பதனால் சுமைகளைச் சுமந்து சென்றதால் விறலியின் தோள்களில்வடு உண்டாகியது; கால்வருந்த நீண்டநேரம் ஏறிய கொடிபோன்ற இடையை உடையவளாயும் இருந்தாள் என்று அறிகின்றோம். மேலும் "மாணிழை விறலி மாலையோடு விளங்க" (புறம் - 141) என்பதாலும் "வளைக்கை விறலியர்" (புறம் - 140) என்பதாலும் விறலியின் தோற்றத்தை உணரலாம்.

**பாடவல்லவள்:**

சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோவை பேய்மகள் இளவெயினி பாடிய பாட்டில் விறிலியைப் 'பாடினி' என்றே அழைத்துள்ளார். கடுங்கோவின் வீரத்தைப் புகழ்ந்து பாடியதால் பாடினி, அணிகலன் பெற்றாள். இதனை, 'மறம் பாடிய பாடினியும்மே' (புறம் -11) என்பதாலும் "இழைபெற்ற பாடினி" என்பதாலும் அறியலாம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடிய பாட்டில் மன்னனின் வலிமைக்கு விறலிபாடும் பாட்டு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

....... "பெருமவார் உற்று
விசிபிணிக்கொண்ட மண்கனை முழவின்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே" (புறம் - 15)

என்பதால் அறியலாம். பிட்டங்கொற்றன் பாடலின் "ஒள்ளிழைப் பாடுவல் விறலியர் கோதையும் புனைக" (புறம் -172) என்பதால் பாடுவதில் வல்லவள் என்று பாணன் மொழியாகவே அமைத்துள்ளார் வடமவண்ணக்கன் தாமோதரனார்.

வல்வில் ஓரிக்குரிய வன்பரணர் பாடலில் "பாடுவல் விறலி ஓர் வண்ணம் நீரும்" (புறம் - 152) என்ற தொடர் அமைந்துள்ளது. பாணன் மட்டுமல்லாது நீயும் ஒரு வண்ணம்பாடு என்று வந்துள்ளதால் பாடல்வல்லவளாக விறலி விளங்குகின்றாள்.

விறலி இரண்டு நீல மலர்களைப் போன்ற கண்களுடன் கிணை என்றபறையை அடித்துப் பாடி வந்தால் பாரியின் பறம்பு மலையைப் பெறுவது எளிது என்கிறார் கபிலர். இதனை,

> "நீலத்து இணைமலர் புரையும் உண்கண்
> கிணைமகட்கு எளிதால் பாடினள் வரினே" (புறம் - 111)

என்பதனால் அறியமுடிகின்றது.

**ஆடுமகள்:**

பாடுவதில் வல்லவளான விறலி ஆடுவதிலும் வல்லவள். வேள் ஆய் அண்டிரனின் பொதிகையின் மலையை ஆடும் விறலியர் மட்டுமே நெருங்க முடியும். பகைமன்னர்கள் நெருங்க முடியாது என்றுரைக்கின்றார் ஏணிச்சேரி முடமோசியார். இதனை,

> ...... "மழைதவழ் பொதியில்
> ஆடுமகள் குறுகின் அல்லது
> பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே" (புறம் - 128)

என்பதாலும் அறியலாம். ஆடுபவள் ஒருத்தி ஆடி இளைத்து ஓடுவதைப்போல காவிரியின் புகழ் அமைந்துள்ளது என்று கிள்ளிவளவன் குறித்த பாட்டில் காணுகின்றோம் (புறம் - 393) சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் மாதவி தாளத்துடன் ஒத்தாடிய நிகழ்வு ஈண்டு எண்ணத்தக்கது.

> "குழல் வழி நின்றது யாழே - யாழ் வழித்
> தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே" (சிலம்பு. அரங். காதை. 139 - 141)

என்றதனால் ஆட்டத்தின் தன்மையை உணரவியலும். அவ்வாறே விறலியும் இசைக்கருவிகளோடு ஒத்தாடினாள். இதனை,

> "சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
> விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
> ஆடினிர் பாடினிர் செலினே
> நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே" (புறம் - 109)

என்பதே சான்றாகும். மாதவிக்கு அரங்கேற்ற முடிவில் 'தலைக்கோல்' வழங்கிச் சிறப்பித்தது மாதிரியே விறலியர்க்கும் 'பொன்னரி மாலைப்' பரிசாக வழங்கப்பட்ட நிகழ்வும் புறநானூற்றில் காணலாம்.

## ஆற்றுப்படை நிகழ்வுகள்:

விறலியாற்றுப் படைக்குரிய இலக்கணமாகப் புறப்பொருள் வெண்பா மாலை, "திறல் வேந்தன் புகழ்பாட விறலியை ஆற்றுப்படுத்த" என்று (பு.வெண்.மாலை.31) சுட்டுகின்றது புறநானூற்றில் நான்கு பாடல்கள் விறலியாற்றுப்படையமைந்த பாடல்களாக உள்ளன. (64, 103, 105, 133) விறலியின் வறுமை நீங்கவேண்டுமெனில்மன்னனையோ அன்றி வள்ளலையோ சென்று புகழ்ந்து பாடி, ஆடி வந்தால் வறுமை நீங்கும் என்று ஆற்றுப்படுத்துவது. வறுமையோடு இருக்கும் விறலி ஒருத்தியைப் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடி வருவோம் என்று ஆற்றுப்படுத்துகின்றார் நெடும்பல்லியத்தனார். இதில் விறலியின் வறுமைநிலையைச் சுட்டும் போது மிகுந்த 'நீருடன் சமைக்கப்பட்ட புல்லரிசிக் கூழ்' என்று குறிப்பிடுகின்றார். சில் வளையல்களையே அணிந்திருப்பவள் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் பாட்டிசைக் கருவிகளான யாழ், சிறுபறை, மாக்கிணை ஆகியவற்றையும் எடுத்துக்கொண்டு செல்வோம் என்பதனால் இசைக்கருவிகளின் பெயர்களும் நமக்கு எடுத்துரைக்கப் படுகின்றன. இதனை,

"நல் யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
......
நெடுநீர் புற்கை நீத்தனம் வரற்கே" (புறம்.64)

என்பதனால் அறியலாம்.

அதியமான் நெடுமான் அஞ்சி குறித்த ஔவையார் பாட்டிலும் விறலியின் வறுமைநீங்க வழி உரைக்கப்பட்டுள்ளது. இதில் விறலியர் பயணிக்கும்போது ஏற்படும் நிகழ்வுகள் மொழியப்பட்டுள்ளன. தோளிலுள்ள காவடியின் ஒருபக்கத்தில் 'பதலை' என்ற ஒரு கண்பறை தொங்கவும் மற்றொரு பக்கத்தில் துளையுடைய சிறுமுழா தொங்கவும் - சில வளையல்களே அணிந்து உணவுக்கலத்தில் யார் உணவளிப்பர் என்ற ஏக்கத்தோடே சென்றவளை அதியாமானிடம் ஔவையார் ஆற்றுப்படுத்தியுள்ளார்.

மன்னனை வணங்கும் பண்பாடு விறலியிடம் அமைந்திருந்தது "குடைமங்கலம்" துறையமைந்த பாட்டில் உறையூர் மருத்துவர் தாமோதரனார் பெருந்திருமாவளவனை விறலி தொழுததாகக் காட்டியுள்ளார். இதனை,

"கட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதனம்"..... (புறம் - 60)

என்று பாடியுள்ளதால் உணரலாம். மன்னன் இறந்தால் பாணன், பாடினி தங்களை அழகு படுத்திக்கொள்ளாத பண்பாடு மிக்கவர்கள். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்த போது குடவாயில் கீரத்தனார் பாடிய பாட்டால் அறியலாம். இதனை,

"பாணன் சூடான் பாடினி அணியாள்" (புறம் -242) எனச் சுட்டியுள்ளார். மற்றொரு பாட்டில் தங்களைப் பாதுகாப்பவர் இறந்தால் பாணர் பூச்சூடமாட்டார்; விறலியர் வளையல் கூட அணிந்துகொள்ளமாட்டார் அதனால் வண்டுகளும் அவர்களிடம் மொய்க்காது என்பதனால் பாண்பாட்டில் திளைத்தவர்கள்

விறலியர் என்பது விளங்கும். இதனை,

> "பாணர் சென்னியும் வண்டு சென்று ஊதா
> விறலியர் முன்கையும் தொடியிற்பொலியா
> இரவல் மாக்களும்..." (புறம் )

என்பதால் உணரலாம். பாடினி போர்க்காட்சியையும் பாணனுக்கு உரைப்பதாய் அமைந்த பாட்டு கோவூர் கிழார் பாட்டாகும். (புறம் - 308). மேலும் பாடினி வாடாமாலை அணிபவள் என்பதை "வாடாமாலை பாடினி அணிய" (புறம் - 364), என்றும் "பாடினி மாலை அணிய" (புறம் -319) என்றும் வந்துள்ளமையால் மாலை அணியக்கூடியவள் என்ற செய்திகள் உரைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் "புரிமலையர் பாடினிக்கு" (புறம் - 361) என்ற தொடரும் பாடினியின் பண்பை இனங்காட்டுவதாகும்.

**முடிவுரை:**

விறலி பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளாள். பாடுவதிலும் ஆடுவதிலும் வல்லவளாக இருந்துள்ளாள். இருந்தபோதிலும் பண்பாட்டு உணர்வு மிக்கவளாகவும் பாணர் சுற்றம் போற்றவே ஒருங்கு வாழ்ந்தவளாகவும் காணப்படுகின்றாள்.

# குட்டித் தொல்காப்பியம்

(முன்இதழ்த் தொடர்ச்சி) முனைவர் பெ. சுயம்பு

*ஊ) நன்னூலுக்கு எதிர்ப்பு*

நன்னூல் கருத்துக்கள் பல இடங்களில் வெளிப்படையாக இலக்கண விளக்கத்தில் மறுத்து ஒதுக்கப்படுகின்றன. வேறு எந்த நூலையும் இந்நூல் இத்துணை எதிர்ப்பதாகத் தெரியவில்லை. நன்னூலை மறுப்பதோடு அமையாது, தம் கருத்துக்கு அரணாகத் தொல்காப்பியச் செய்திகளைத் துணையாகக் கொள்வதையும் இந்நூலில் காணமுடிகிறது. சார்பெழுத்துக் கொள்கையைச் சான்றாக இங்குக் காட்டலாம்.

“ஆய்தக் குறுக்கமொன்று உளதென்றும் அதனோடு கூடச் சார்பெழுத்துப் பத்தாமென்றும் அதன் விரித்தொகை முந்நூற்றுபத்தொன்பதா மென்றுங் கூறுவாரும் உளராலோ வெனின்.... ஆசிரியர் தொல்காப்பியனார் அதனைப் புணர் மொழிக்கண் வரும் ஆய்தமாகக் கூறினமையான் ஆய்தக்குறுக்க மொன்று இன்றெனவும் இன்றாகவே சார்பெழுத்துப் பத்தாமென்றல் பொருந்தாதெனவும் உயிர்மெய்யொழித்து ஏனையவெல்லாம் இடவேற்றுமையானன்றி எழுத்து வேற்றுமையான் அங்ஙனம் பல்காமையிற் சார்பெழுத்து முந்நூற்று பத்தொன்பதாமென்றல் நிரம்பாதெனவும் மறுக்க” (இ.வி.உரை5). இங்கு இலக்கண விளக்கம் சார்பெழுத்தின் வகை பத்து; அதன் விரிமுந்நூற்று பத்தொன்பது என்னும் நன்னூல் கொள்கையை மறுக்கிறது. சார்பெழுத்து ஒன்பது வகை என்பது இலக்கண விளக்கக் கொள்கையாகும்.

இலக்கண விளக்க ஆசிரியருக்கு இலக்கணக் கொள்கையால் மட்டுமின்றி, சமய வேறுபாட்டாலும் நன்னூலார்பால் வெறுப்புணர்வு இருந்தது. இது எழுத்திற்கு அவர் வரைவிலக்கணம் தருமிடத்து வெளிப்படுகிறது. நன்னூலார் தம் சமணக் கொள்கைக்கு ஏற்ப ‘மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி எழுத்து’ என்று வரையறுக்கிறார். ஆனால் இலக்கணவிளக்கத்தாரோ தம் சைவத்தின் நாதகாரியத்தை நிறுவுகிறார். ‘மொழிமுதற் காரணமாம் நாதகாரிய ஒலி எழுத்து’ என்பது இலக்கண விளக்கத்தின் கொள்கையாகும்.

## 3. தொன்னூல் விளக்கம்

### அ) நூலின் தோற்றம்

தொன்னூல் விளக்கச் சிறப்புப் பாயிரம் அந்நூல் தோற்றம் குறித்துப் பின்வருமாறு கூறுகிறது:

"ஒளிவிடா மூடின தீபத்தாற் பயனில்லை யென்றதுபோல முன்னோர் தந்த விலக்கண நூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக் கிடப்ப விக்காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில்லாததற் கொருபயனு மில்லை. தென் மொழியார்க்கு வடமொழியைத் தானுணர்த்தக் கருதியவர் முன்னறிந்த தமிழ்ச் சொற் கொண்டலவோ வடமொழிப் பயனையுரைத்தல் வேண்டு மாகையான் மூத்தோர் புதைத்த நூனலம் விளங்கவுங் கல்லாதவரும் பயன்கொண்டுணரவு நானேயதன் போர்வை நீக்கி யறிஞர் முன் கொளுத்தின தீபமெவர்க்கு மெறிப்பக் கையிலேந்தினாற் போல வவர்முன் செந்தமிழ் மொழியான் மறைத்த விலக்கண நூலை யிளந்தமிழுரையால் வெளிப் பொருளாக்க நினைத்தே னாயினு முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தா லிந்நூலும் பெருகிக் கண்டவ ரஞ்சித் துணியாரென்று கருதி முனமிக வறிய வேண்டுவ தொன்றைத் தெரிந்து தருவேன்"

இது சிறப்புப் பாயிரத்திற்கு வீரமாமுனிவர் எழுதிய உரையின் பகுதி. தொன்னூல் விளக்கத்தை எழுதிய முனிவரே அதற்கு உரையும் எழுதினார். ஆதலின் இந்நூல் நூற்பா, உரை என இருவகை நடையால் அமைந்தது.

இச்சிறப்புப் பாயிரப்பகுதி முந்தை இலக்கண நூல்கள் புரிதற்கு அரிய செந்தமிழ் நடையால் அமைந்தவை; அவற்றை எளிய நடையில் தொன்னூல் விளக்கம் விவரிக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது. தவிர, இன்றியமையாத இலக்கணச் செய்திகள் மட்டுமே இந்நூலில் விவரிக்கப்படுகின்றன என்பதும் இதில் அறியப்படுகிறது. மேலும், வடமொழி இலக்கணச் செய்திகளை விவரிப்பதும் தொன்னூல் விளக்கத்தின் நோக்கமாக உள்ளது என்பதும் புலனாகிறது.

### ஆ) நூலமைப்பு

**தொன்னூல் விளக்கம் எழுத்ததிகாரம் (PART I - LETTERS).**

சொல்லதிகாரம் (PART II - WORDS), பொருளதிகாரம் (PART III - PORUL), யாப்பதிகாரம் (PART IV - PROSODY), அணியதிகாரம் (PART V - RHETORICAL EBELLISHMENT) ஆகிய ஐந்து பெரும்பிரிவுகளை உடையது. எழுத்ததிகாரம் எழுத்தியல், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விகாரம் என்னும் மூன்று இயல்களை உடையது. இவ்வதிகாரத்தில் 40 நூற்பாக்களில் எழுத்திலக்கணம் விவரிக்கப்படுகிறது.

சொல்லதிகாரம் சொற்பொதுவியல், பெயர், வினைச் சொல்லியல், இடைச் சொல்லியல், உரிச்சொல்லியல் எனும் ஐந்து இயல்களால் ஆனது. பொருளதிகாரத்தில் பதிகம், காரணம், விரிவு, தொகையும் துணிவும், உரிமை என்னும் ஐந்து பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. செய்யுளுருப்பு, செய்யுளியல், செய்யுண் மரபியல் எனும் மூன்று இயல்புகள் யாப்பதிகாரத்தில் உள்ளன. அணியதிகாரத்தில் சொல்லணியியல், பொருளணியியல் ஆகிய இரு இயல்கள் காணப்படுகின்றன.

தொன்னூல் விளக்கத்தில் அதிகாரப் பகுப்பு, இயல் பகுப்பு இரண்டும் தொல்காப்பியத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது.

*இ) நன்னூலை வழிமொழிதல்*

எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் நன்னூலைப் பெரிதும் பின்பற்றி இந்நூலில் விவரிக்கப்படுகின்றன. நூலாசிரியர் தம் உரையில் நன்னூல் நூற்பாக்களைத் தாராளமாகச் சுட்டிக்காட்டி தம் கருத்தை நிலைப்படுத்துகிறார். சான்றாக,

"*நன்னூல் றனழ எஔவ் முயிர் மெய்யு முயிரளபல்லாயச்*
*சார்புந் தமிழ் பிற பொதுவே*" என்பதையும்

"*நன்னூல் - பால்பகா வஃறிணைப் பெயர்கள்*
*பாற்பொது மைய*"

என்பதையும் இங்குச் சுட்டலாம். இத்தகைய பல நன்னூல் நூற்பாக்கள் தொன்னூல் விளக்கம் முழுவதும் பரவலாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் உரிச்சொற்களை அடைமொழிகள் (Attributives) என்று நன்னூலைப் பின்பற்றிக் கூறுகிறது.

வீரமா முனிவர் நன்னூலின்பால் மிகுந்த மதிப்பும் புலமையும்

பெற்றவர் என்பதை, அவர் எழுதியுள்ள செந்தமிழ் இலக்கணம், கிளாவிஸ் ஆகிய நூல்களிலும் காணலாம். செந்தமிழ் இலக்கணச் செய்திகளுள் எழுத்தும் சொல்லும் நன்னூல் நூற்பாக்களை அடித்தளமாகக் கொண்டு விவரிக்கப்படுகின்றன. ஒரு சான்று.

"5th Case, இல் or இன்: respecting this case, the Narmal States:

*ஐந்தா வதற்குரு பில்லு மின்னு*
*நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே*

(சொல்லதி. பெயரியல். ச[12]. சூத்)"

வீரமாமுனிவர் நன்னூலைப் பின்பற்றினார். ஆனால் தொல்காப்பியத்தை அவர் போற்றவில்லை. இதற்குச் செந்தமிழ் இலக்கண முன்னுரையிலுள்ள பின்வரும் பகுதி நல்ல சான்றாகும். இலத்தீன் மொழியில் எழுதப்பெற்ற இந்நூலை பெஞ்சமின் கய் பேபிங்டன் என்பவர் ஆங்கில மொழியாக்கம் செய்துள்ளார்.

"One ancient work, written by a person called Tolcappiyanar (ancient author) is still to be met with; but, from its conciseness, it is so abscure and unintelligible, that a devotee named pavanandi was induced to write on the same subject. His work is denominated narmal. a term that corresponds exactly to the French belles lettres, and the Latin Litterae humaniores. Although every one is familiar with this title, few, have trod even on the threshold of the treatise itself".

கிளாவிஸ் '*நன்னூல் பஞ்சவிலக்கணம்*' என்று சுட்டுகிறது (பக்கம் 1).

வீரமாமுனிவர் தொல்காப்பியத்திலிருந்தும் நூற்பாக்களை மேற்கோள் காட்டித் தம் உரைக்குமெருகு ஏற்றியுள்ளார். எனினும் நன்னூலுக்கே முன்னுரிமை தந்து அதனைப் போற்றியுள்ளார். எழுத்துக்களின் பிறப்புச் செய்திகள் தொன்னூல் விளக்கத்தில் இரு நூற்பாக்களில் பொதுப்படச் சுட்டப்பெற்றுள்ளன. இவற்றை விரிவாக உரைப்பதால் பயனில்லை என்று முனிவர் கூறுகிறார்.

"ஆயினும் இவற்றையும் எழுத்தின் முறையையும் எண்ணையும் உணர்த்துவது பயனின்றிப் பொழுதழிவாகை யானும், இனிச்சில வுரைப்பது முறையாமென்றமையானும், இங்ஙனமவற்றை நீக்கி எழுத்தின் வகுப்பும் விகாரமுமெனு மற்றிரண்டையும் விளக்கிக் கூறுதும். இதன் விரிவையுணர

வேண்டில் தொல்காப்பியத்துட் காண்க. அதனினும் விரிவு பேரகத்தியம் நன்னூல்". (தொன்னூல் விளக்கம்.3)

எழுத்ததிகாரத்தின் இறுதி நூற்பாவின் (40) உரையில் ஆசிரியர் நூற்பாக்களில் சொல்லப்படாத புணர்ச்சிச் செய்கைகள் பல்வற்றை நன்னூல் நூற்பாக்களோடு தொகுத்துத் தருகிறார். இந்த அணுகுமுறையை வீரமாமுனிவர் இலக்கணவிளக்க நூலாசிரியரிடமிருந்து பெற்றுள்ளார். இலக்கண விளக்கத்தில் அதிகார இறுதியிலுள்ள புறநடை நூற்பாக்களின் விளக்கமாகத் தொல்காப்பியச் செய்திகள் வழிமொழியப் பெற்றுள்ளன.

வெவ்வேறு ஆசிரியர்களால் எடுத்துக் காட்டப்பெற்றுச் சில அகத்திய நூற்பாக்கள் அழியாமல் உள்ளன. ' (செந்தமிழ் இலக்கணம் முன்னுரை, பக்கம் 9) என்று கூறிய வீரமாமுனிவர் இங்கு அகத்தியம் தொல்காப்பியத்தை விட விரிவான நூல் என்று சுட்டுகிறார். மேலும், தொல்காப்பியத்தினும் விரிவாகச் செய்திகளைத் தருவதாக நன்னூலைக் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.இவை யாவும் வீரமாமுனிவர் தொல்காப்பியத்தை விடவும் நன்னூலையே பெரிதும் பின்பற்றுகிறார் எனற்குச் சான்றுகளாகும்.

ஈ) *மேலை நாட்டுவிளக்கமுறை*

தொன்னூல் விளக்கத்தில் கூறப்பெறுகிற செய்திகள் சில புதியனவாக உள்ளன. சிறப்பாக, செய்திகளை அடக்கி முறைப்படுத்தி விவரிப்பதில் முந்தைய தமிழ் நூல்களுக்கு வேறான புதிய அணுகுமுறை தொன்னூல் விளக்கத்தில் இடம் பெற்றுள்ளது. இது இந்நூலின் தனி இயல்புகளுள் குறிப்பிடத்தகுந்தது. இம்முறை மேலை நாட்டு இலக்கண முறையைத் தழுவியதாகும். பதவியல் செய்திகள், சுட்டெழுத்து, வினா எழுத்துப் பற்றிய விளக்கங்கள் போல்வன சொல்லதிகாரத்தில் அடக்கப் பெற்றுள்ளன. பொருளதிகாரத்தை இந்நூல் பகுத்து விவரிக்கும் முறை முற்றிலும் புதுமையானது.

உ) *வடமொழி, பல நூல்கள் செல்வாக்கு*

வடமொழிக்குரிய தீர்க்கசந்தி, குணசந்தி ஆகியன விவரிக்கப்படுகின்றன (தொன்னூல் விளக்கம். 38).

தொன்னூல் விளக்கத்தில் பல நூல்களின் செல்வாக்குக் காணப்படுகிறது. நாற்கவிராச நம்பியின் அகப் பொருள் விளக்கம் அகப்பொருள் இலக்கணத்திற்கும் தண்டியலங்காரம் அணியதிகாரத்திற்கும் அடித்தளமாகக் காணப்படுகின்றன. யாப்பருங்கலக் காரிகைச் செய்திகளை யாப்பதிகாரம் பின்பற்றுகிறது. பாட்டியல் செய்திகள் யாப்பதிகாரத்துள் அடக்கப்பெற்றுள்ளன. இத்தகைய செல்வாக்கு முனிவர் எழுதியுள்ள செந்தமிழ் இலக்கணம், கிளாவிஸ் ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது. இதனை முனிவர் வெளிப்படையாகவே அந்நூல்களில் சுட்டியுள்ளார்.

## 4. மேலும் ஒரு செய்தி

"ஏறக்குறைய முனிவருக்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்த திருவாரூர் நாவலர் வயித்திய நாத தேசிகர் எனும் சைவப் புலவர் இலக்கண விளக்கம் என்ற பெயரில் விரிவான ஐந்திலக்கண நூலை யாத்தார். அந்நூல் நூற்பா, உரை எனும் வடிவில் அமைந்துள்ளது. சைவ சமயத்தவர் இயற்றிய நூலுக்கு இணையானதாகக் கிறித்தவச் சமயத்தவரால் தொன்னூல் விளக்கம் நூற்பாவும் உரையும் கலந்து எழுதப்பெற்றுள்ளது. ஐந்திலக்கணங்களையும் சுருக்கித் தருதல் மட்டுமன்றி, சமய உணர்வும். தொன்னூல் விளக்கம் தோன்றுவதற்குக் காரணமாய் இருக்கலாம். இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் (நூல் = இலக்கண நூல்) எனும் பெயரமைப்பிலும் போட்டியுணர்வு வெளிப்படாமலில்லை. (பெ.சுயம்பு, செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும், பக்கம். 542)"

## 5. தொகுப்புரை

இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் எனும் இரண்டனுள்ளும் இலக்கணச் செய்திகள், விவரிக்கும் அணுகுமுறை, தொல்காப்பியத்தைப் போற்றுதல் போன்ற காரணங்களால் இலக்கண விளக்கமே தொல்காப்பியத்தைப் பெரிதும் சார்ந்துள்ளது; தனித்தமிழுக்கு இலக்கணம் கூறுதல் என்ற தொல்காப்பியக் கொள்கையை ஓரளவு பேணுகிறது. **இதனால் இலக்கணவிளக்கமே தொல்காப்பியத்தின் வழித்தோன்றலாக ஏற்கத்தக்கது. குட்டித் தொல்காப்பியம் என்ற சிறப்பு இலக்கண விளக்கத்திற்கே பெரிதும் ஏற்புடையது.**

# பௌத்த சமய விசாரணை

*ஜெ.எம்.நல்லசாமிபிள்ளை*

**பௌத்த மதம் நம்பூர்வீக சார்வாகப் பௌத்தத்தின் நவீனத்திரிபென்றே சொல்லவேண்டும். இதனால் நம்மாசிரியர்களால் சாருவாகத்துக்குப்பின் பௌத்தத்தை வைத்த முறைமையும் பெறப்படும். இம்முறை காலத்தானன்று. மனிதனின் குணதத்வாதியபிவிருத்தியின் பாற்று. இங்கே ஒன்று அவசியம் கவனிக்கவேண்டும். பழையன புதியனவுமாகிய நம் நூல்கள் சென்றகால நிகழ்கால வர்த்தமானங்களை நிர்ணயமாகக் குறிக்காமற்போன போதிலும் மற்றெந்த சாதியாரின் சரித்திரங்களும் குறிக்காதொழிந்த தனித்தும் பலவுமாகிய உயிரின் தத்துவ சரித்திரத்தை விளக்கிக்காட்டுகின்றன.**

ஆறு மதங்களையும் நம்மவர்கள் வகுத்த முறையினானே அவைகளின் காலம் ஒன்றின்பின் ஒன்றனது எனச் சிலர் மருள்கிறார்கள். நாம் நம்வயதைக் கணக்கிடுவது போலல்லாமல், மாறாகக் கணக்கிடுவோமானால், முன்கூறப்பட்ட மதங்கள் பழையனவையாம், அறிவு முதிர்ச்சி விருத்தாப்பியமன்று. அது என்றும் இளமையுடைத்து. உண்மை விருத்தாப்பியதிசையையே இரண்டாவது பால்யமென்று சொல்வது. சாருவாகன் என்று சொல்லப்பட்ட லோகாயதன் பெருந்திண்டியும் சுவேச்சையும் கொண்ட பாலனாவான்; பௌத்தன் நற்சிந்தையும் நற்குணமும் பொருந்திய வாலிபனாவான். உலகத்துன்பங்களும் மாயைகளும் அவனைச் சூழ்ந்துவருத்த, அதற்குட்பட்டு அமிழ்வானோ, அல்லது மீண்டும் நற்குண நற்செய்கை கெடாது புருஷனாவானோ., அதைப் பின்னன்றே பார்க்கவேணும்.

பாவச்செய்கைகளின் பலமும் அதன் பிடிப்பும் அறியாத இளம்பருவத்திலே, நான் மெய்யும் ஒழுக்கமுங்குன்றேனென அறியாமல் உறுதிகூறினன். ஆயின் அவ்விளம்பருவத்திலேயே, நல்ல விதைகளை விதைத்து நல்ல பூமியில் வேரூன்றச் செய்யாவிடில் அவன் உறுதியெல்லாம் வீணாகும். மேல், பௌத்தரின் குணாதிவிஷயங்களைப் பற்றியும் பேசப்புகவும் அவருடைய பரிசுத்த சரணங்களில் நம் எளிய ெந்தனத்தைச் செலுத்தப் பெறுவோமாகவும். அவருடைய பரிசுத்தத்தையும்

பரோபகாரத்தையும் பெருந்தன்மையையும் நோக்க நமக்கு உண்டாகும் வணக்கமோ அளவின்று. அவர் இந்தியர். இந்தியர்களிலும் இந்தியர் என்பதை யாரும் மறந்து விடுகிறார்கள்.

டாக்டர் ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர், அவர் இந்தியர்கள் யாவர்களினும் மேம்பட்ட மேன்மையையும் ஞானத்தையும் உத்தமகுணத்தையும் பொருந்தியவரென்று புகல்கின்றார். அவர் காலத்திலேயே ராஜராஜாக்களினாலும் மற்றவர்களினாலும் அவர்களப்படுத்தப்பட்டார். அவர்கள் அவர் என்ன மதத்தைப் பிரசங்கித்தார் என்று கவனிக்கவில்லை. அவருடைய செய்கையும் குணமும் பரிசுத்தமாயிருந்ததே போதுமானதாயிற்று. நிரீசுவரசாங்கிய பிரவர்த்தகராகிய கபிலமுனிவரை முனிசிரேஷ்டராக ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் அங்கீகரித்தார். அது அவர் மதத்தை அங்கீகரித்ததினாலோ? அன்று. அநேகமாக அவர் மதத்தைக் கண்டிக்கப் பிரயாசைப்பட்டிருக்கிறார். சைமினிமுனிவர்கொடிய நாஸ்திகர். இருந்தும்; அவர் பெரிய மகாரிஷியாகக் கொள்ளப்பட்டார். இன்னும் நம்மவர்களில் இத்தன்மைய குணாதிசயம் காணக்கூடும். அவன் மகம் மதியனோ கிரிஸ்தவனோ, அவன் ஞானநிலையில் நிற்பானானால் அவனை எல்லாரும் சூழ்ந்து வணங்குவார்கள். இதனாலல்லவோ களவாளிகள் காஷாயத்தையும் சாம்பலையும் அணிந்து சாம்பலில் இருந்து ஒரு எழுத்து வாசனையும் தெரியாது மௌனம் சாதித்து மோசஞ்செய்வதற்கு இடமாகிறது.

ஆகையால் பௌத்தரும் ஒருவிதத் தர்மத்தை விளக்க வந்த பரமரிஷியென்று கொண்டாடப்பட்டது ஆச்சரியமன்று. ஆகவும் திரிபுர அசுரர்களைத் திருப்பவேண்டி விஷ்ணுபகவானே பௌத்தராக அவதரித்தாரெனவும் கூறப்பட்டது. எப்படி கிரிஸ்துநாதர் காலத்தில் அவர் யூதர்களில் ஒன்றானவரன்றி வேறாகக் கொள்ளப்படவில்லையோ அப்படியே பௌத்தர் காலத்திலும் அவர் இந்துக் களினின்றும் வேறுபட்டவரென்று தாமும் மற்றவர்களும் எண்ணவில்லை. அவருக்குப் பின்காலத்திலும் அநேகசங்கங்கள் கூடிய பின்னருமே பௌத்தம் வேறுமதமாக மாறுபட்டது. புத்தருக்கோ எது உடுத்து ஏதமுது செய்திடினும் குற்றமில்லை. ஆசையைக் களைந்து, வேண்டுதல்

வேண்டாமையற்று. இருவினை யொப்படைய வேண்டுவதே முக்கியம். அடைந்த பின் பெறும் பேறு ஏதேனும் உண்டோ வென்று விசாரிக்கவும் வேண்டுவதில்லை.

ஆயின் இந்த ஆழவொடுக்காத அழகிய சிற்றிலைக் கட்டியவர் பின்வரும் விளைவைக் கவனிக்கவில்லை. என்று மழியாச்சுடர் பொற்குன்றின் பேரில் கட்டப்படாததும் அதனால் பெறும் பேற்றையும் எதிர்நோக்காததுமாகிய எந்தமதமும் நிலையுள்ள தாயிருக்குமோ? எப்படி முடிந்தது; அருமையாக வளர்க்கப்பெற்ற சாது சங்கங்களில் அவர் காலத்திலேயே கலகம் விளந்து, ஊண், உடை, காலம் இடம் முதலியவைகளைப் பற்றி தர்க்கித்து ஒருவரையொருவர் பாஷாண்டிகள் என்றும், மாரன் ஏவலாளர்கள் என்றும் நிந்தித்தும் தூஷித்தும் வந்தார்கள்.

பூசாரிகளையும் அவர்கள் ஆசாரங்களையும் புத்தர் எவ்வளவோ இகழ்ந்திருந்துய கூடிய சீக்கிரத்தில் மிகவும் கட்டுப்பாடுகள் அமைந்து ஆசாரங்களுடன் ஆசாரியர்களையும் ஏனைய மதங்களில் இல்லாத அநேக கீழ்மேல் உலகங்களையும் தேவர்களையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். கடைசியில் அந்த மதம் அதிகம் கெட்டுப்போனபடியால் பிறந்தவிடத்தினின்றும் வேருடன்பிடுங்கி எறியநேரிட்டது. "புத்தமதம் அதிகம் கெட்டது அசோகர் காலத்துக்குப் பின்னரே. அதுவரை இந்த மதத்தை நிர்ப்பந்தம் செய்யக்கேட்டிலோம்" என்று ரைஸ் டேவிட்ஸ் பண்டிதர் சொல்லுகிறார். இவ்வித நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லையென்று சொல்ல வரவில்லை. ஆனால் இது ஐரோப்பிய கண்டங்களில் நாம் கேட்டிருக்கும் போல்வதொன் றென்று நாம் நினைக்கக்கூடாது. இக்காலத்தைவிட அக்கால்த்து ஒரு மதத்தினின்றும மற்றொரு மதம் திரும்புவது மிகவும் எளிது. பெரியபுராண சரிதங்களினால் புத்தர்களும் நம்மவர்களும் முக்கியம் அரசனைத் தங்கள் பக்கம் திருபச்செய்ய முயற்சித்ததாகத் தெரியவருகிறது. இவ்விதம் திரும்பிய பின் குடிகளெல்லாம் அவ்விதமாயினராகச் சொல்லப்படுகிறது. அக்குடிகளின் திருத்தம் இருவகையிலும் நாமகார்த்தமாத்தான் தோற்றுகிறது. மடங்களில் இருக்கக் கூடிய சந்நியாசிகளைத் தவிர பெரும்பாலும் குடிகள் புத்தமதஸ்தர்களாகவில்லை யென்பதே நமது துணிவு; அரசன் புத்தனானால் யாவரும்

புத்தர்களானதாகப்பாவனை. இதன் மாதிரிதான் அசோகர் காலத்தில் இந்தியாமுழுதும் புத்தமதம் பரவியதெனச் சொல்வது, எனினும் கடைசியில் மதமாற்சரியம் உண்டாகியது. அது தென்னிந்தியாவில் கி.பி. முதலாவது நூற்றாண்டு முதல் ஏற்பட்டதாகவும் நற்சாட்சியங்களிருக்கின்றன. ஐரோப்பிய வித்வான்களுக்கு அது விஷயம் தெரிந்தவையல்ல. அக்காலம் தென்னிந்தியாவில் பிரபலமான அரசர்களிருந்து வடக்கிலும் தெற்கிலும் அவர்கள் ஆளுகையை விரிவுபடுத்தி வந்ததாகத் தெரிகிறது.

சாசனங்களினால், பம்பாய் ராஜதானியிலுள்ள வாதாபி (இப்பொழுது - பாதாமி) என்ற பட்டணத்தை தென்னிந்தியர்கள் பிடித்ததாகக் காணப்படுகிறது. (அந்தச் சண்டையில் சேனைத் தலைவராகப் போயிருந்தவர் சிறுத்தொண்டர்) இலங்கையை ஒரு முறைக்கு மேலாகப் பிடித்ததாகவும் தெரிகிறது. மாணிக்கவாசகர் காலம் கி.பி.முதல் நூற்றாண்டாகக் கொள்ளின் அவர்காலத்திலேயே இவ்வித மதப்போா விளைந்ததாகின்றது. இலங்கையரசன் ஊமைப் பெண்ணைப் பேசுவித்து நம்மவர்கள் செயமடைந்தார்கள். திருவாதவூர்ப் புராணத்தில் இச்சரிதம் விஸ்தாரமாகக் காணப்படுகிறது.

இப்பவும் சிங்களர்களுக்குள் ஊமைப்பெண்ணைப் பேசுவித்த ஐதீகம் நன்றாய்த் தெரிந்ததாகக் காணப்படுகிறது. பிற ஜைனமதம் வளர்ந்து ஓங்கினதாகத் தெரிகிறது. அப்பமூர்த்திகளும் சைனராயிருந்த காலத்தில் தர்மசேனரென்ற பட்டம் வகித்து, சைவத்தில் திரும்பியபின் சைனர்களால் ஏவப்பட்ட பாடலிபுரத்து அரசனால் துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிகிறது; அவர் காலத்தியவர், சிறந்து விளங்கிய திருஞானசம்பந்தராகவும் அவர்செய்த அற்புதங்களால் கூன்பாண்டியன் திருந்தினவனாகி, புத்தமதம் வேருடன் அறுபட்டதாக வெளியாகின்றது. இது கி.பி. 6ம் நூற்றாண்டின் முதலில் நடந்தது. இக்கால வரையறை ஏற்படுத்திய பண்டிதர் சுந்தரம்பிள்ளையவர்களாலும் வெங்கய்யர் அவர்களாலும் காட்டிய ஏதுக்களுடன் சீனர்களுக்குள் விளங்கும் சரித்திரமுறைப்படி ஏற்படும் தென்னிந்தியாவில் அநேககாலம் உழைத்த போதிதர்மன் என்பவன், கி.பி. 526 ஆம் ஆண்டு

பிரமாணர்கள் செய்த துன்பம் பொறாது சீன தேசம் போயினான் என்ற சங்கதியும் ஓர் ஏதுவாகும்.

போதிதர்மனும் புத்தமதத்தைவிட சைனமதத்திலேயே பிரவர்த்தித்தவனாகவும் இதனினும் பகுக்கப்பட்ட ஒருவித மதத்தையே சீனர்களுக்குப் போதித்தான் என்றும் காணப்படுகின்றது. இத்துடன் சைனமும் புத்தமும் தலை யெடுக்காமற் போயிற்றாயினும் பின்னும் தங்கியிருந்தவர்களை நம்மவர்கள் துன்புறுத்தாதிருப்பதுடன் நம்மரசர்களும் பிற்காலத்தில் அவர்களுக்கு நன்கொடை கொடுத்து ஆதரித்துவந்தார்களெனவும் காணப்படுகிறது. ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீ ராமானுஜரும் பௌத்தமதத்தை முற்றிலும் ஓட்டினதாகக் கூறும் கூற்று உண்மையாகக் காணப்படவில்லை. அவைகள் சாஸ்திர சாம்பிரதாயவாதக் கூற்றாகுமே யொழிய வேறன்று. ஆயினும் சங்கரர் சம்பந்தப்பட்டவரையில் வட இந்தியா விலுள்ள சில புத்தமடங்களை யொழித்து அம்மாதிரியான தம்மடங்களை ஸ்தாபித்திருக்கலாமென யூகிக்கவிட முண்டாகின்றது. சங்கரர் காலத்துக்கு முன் புத்த ஜைன மடங்களைத்தவிர மற்ற மடங்கள் இருந்ததாக வெளியாகவில்லை.

புத்தமதத்தில் கூறியுள்ள அறத்தைப்பற்றிய கருத்துக்கள் பலராலும் நன்கு புகழப்பட்டிருக்கிறது. மாக்ஸ்மூலர் பண்டிதரும், புத்தர் கூறிய அறம் உலகினர் அறிந்த யாவற்றிலும் நிறைந்து சிறந்த தெனக் கூறினர். எனினும் இவ்வறத்தைச் சீனர்களுக்குள் விளங்கும் கன்பூசியன் மதத்தோடு ஒப்பிடில் மிகவும் தோற்றதாகக் காணப்படுகின்றது. அதன் (புத்தமதத்தின்) நிதானங்கள் பல குறைந்துள்ளது. அநேகசாதியர்களை மேம்படுத்தியதாகவும் காணப்படவில்லை. பர்மாவில் அன்றி மற்ற சாதியர்களால் நன்மார்க்கத்திற் புகுத்திய தின்று, எட்கின்ஸ் பண்டிதர் சொல்வது சீனரில் என்ன நல்லொழுக்கம் இருக்கின்றதோ அது கன்பூசியன் மத போதனையினால் ஏற்பட்டது. கர்னல் ஆல்காட் அவர்கள் எடுத்துக்காட்டிய கணக்கின்படியே, இந்துக்களிலும் சிங்களர்கள் தீயர்க ளென்றாகின்றது. இதன் உண்மை அத்தேயத்தை ஒருமுறை போய்ப் பார்த்தாலே நன்கு விளங்கும். பர்மாவிலும் சனங்களை நல்லொழுக்கம் பெறச்செய்த புத்தமதத்தின் பலம் இந்த சீன

நாட்டிலிருக்கும் குறிஞ்சி நாடர்களிலும் இந்திய ஜாதியார் சிறந்தமையே காரணமாகவும் சொல்லலாம்.

இந்தியரின் கைத்தொழிற் றேர்ச்சியும் நாகரீகமுமே புத்தமதம் சிறந்ததற்கு காரணமாகும் என எட்கின்ஸ் பண்டிதர் பின்னும் வரைகின்றனர். புத்தமதம் தத்துவ உண்மைகளை அறிய* பர்மர்கள் இயலாதவர்கள். இவ்வறிவின் விசேஷமில்லாமல் புத்ததர்மத்தினானே பர்மர்கள் பக்தியும் நல்லொழுக்கமும் கொண்டார்களெனின் அதற்குளதாகிய ருசுக்களைக் காண்கிலோம் என பிகான்டெட்பிஷப்புச் சொல்லுகின்றார். முடிவில் புத்தமும் இந்து மதத்தில் பிறந்த சிறுமதலையன்றி வேறேனோ? 'இந்துமதம் எவ்வளவு கெட்டதென்றும் நிர்பந்தமுள்ளதென்றும் காட்டாது, இதன் எதிர்மறையே, புத்த மதம் சித்தாந்தப்படுத்துகின்றது. ஏனெனின் புத்தமதத்தில் சிறந்ததும் அழகியதும் பொலிவதுமானவை உளதென யாரும் மறுக்கார்' என் கூறுகிறார் ரைஸ் டேவிட்ஸ் பண்டிதர்.

## புத்த நிர்வாணம்

புத்தமதத்துவ விஷயம், இந்நூலில் வேண்டுமட்டும் பூர்வபட்சம் பண்ணியிருத்தலின், அதனைப்பற்றி ஈண்டு விஸ்தரிக்க வேண்டியதின்று. ஆயினும் புத்தமதஸ்தரின் பெரும்பேறாகிய நிர்வாணத்தைப் பற்றி இரண்டொருமொழி கூறுவோம். பண்டிதர் பலரும் பலவாய் இதைப்பற்றிப் பகர்ந்திருக்கின்றனர். ஒருவரோடொருவர் மாறுபட்டு மாக்ஸ் மூலர் ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர் இருவரும் நிர்வாணம் என்பது ஆன்மாவின் கேட்டை உணர்த்துவதின்று என்றும், பரமரகசியமான கர்மவிடுப்பின்படி பிறப்புக்குக் காரணமாகிய உள்ளம் உணர்வின் கண்ணுள்ள கொடிய அவாவின் பற்றை யறக்கெடுத்தல் என்பதே அதன் உண்மை என்றும் பகரலுற்றார்கள். இவ்வாறு உரைத்தது உண்மையே யாகுமாயினும் புத்தமதத் கோட்பாட்டின்படி ஆன்மா உண்டென்பதும், வீடடைந்தபின்னர் அது நிலைபெறுமாறும் உண்மையாகுமோவென்று யாம் கேட்கவிடந்தரவேண்டும். சீனர்களுக்குள் பின்விளங்கியவாறு இந்த உண்மையைச சுத்த் பௌதீகமாக்கி இப்பொன்னுலகங்களைப் பற்றிப் போற்றித்து

உண்டு. எனினும், புத்தமதக் கோட்பாட்டின்படி ஆன்மா உண்டோ இல்லையோ என்னும் வினாவுக்கு விடை இல்லை. புத்தர் ஆன்மா உண்டென்றும் இல்லையென்றும் உறுதிகூறவில்லை: அவர் பின்றொடர்ந்தாரும் ஆன்மாவில்லை ஆண்டவனில்லை எனக் கூறினார்களென்பதும் எமது துணிவு.

புத்தரின் கருத்து அவாவையும் பிறப்பிறப்பின் துன்பங்களையும் அறுத்தலுமே, போதும், மற்றயவிஷயங்களை விசாரிக்கவேண்டுவதில்லை யென்பன. இந்துமதத்திற்கூறிய முன்னின்ற விஷயம் கவனிக்கவேயில்லை. முன்னர் யாம் காட்டுமாறு இந்துமதத்திற் கூறிய ஒரு பக்கத்தையே எடுத்துக்காட்டி அதிலுள்ள மறுபக்கத்தையும் மறந்தொழிந்தனர். நிர்வாணம் என்னும் மொழிக்கு மேலெழுதிய பொருள் இந்துமதத்துள்ள பொருளே. இம்மொழி கீதையில் ஐந்தாம் அதிகாரம் 24 முதல் 26 சுலோகங்களில் வருகிறது. சைவசம்ஸ்காரங்களில் நிர்வானதீக்ஷை பரமரகசியமாகும். இம்மொழிக்கு ஓடலற்ற என்பது பதப்பொருள்.

வாயு, அக்னி என்னும் மொழிகள் போல ஓடலற்றதே அசலம், ஸ்திரம் சிந்தைதெளிதல் என்னும் பொருள்களால் விளங்கும். இச்சிந்தைதெளிதலும் அவாவினையகற்றுவதால் உண்டாவதால் நிர்வாணம் என்பதை கெடுதல் அழிதல் என்னும் பொருளைத்தந்தது. (நிர்வாணம், நிர்வாணி உடையின்மை, யில்லாதவன் அருகனை நிர்வாணியாக்கியதும் இதன் கருத்தே) ஆகவும் நிர்வாணம் மோக்ஷம் முக்தி, வீடு என்னும் மொழிகளெல்லாம் ஏதோ ஒன்றினை விடுத்தல், கெடுத்தல் எனப் பொருள் கொள்ளும். ஆயின் எதனை அழித்தல் கெடுத்தல் வேண்டும்? அதுவே, நம்மின் அகங்காரமும், யானெனதென்னும் அகப்பற்றும் புறப்பற்றும் விருப்பும் வெறுப்புமாகிய அவா. அதுவே பிறப்பின்வித்தும் துன்பத்தின் காரணமுமாம். இந்த ஆணவமாகிய மலம் நசிக்கும் வரை பிறப்பிறப்பும் துன்பமும் துயரமும் நீங்கா: ஆயின் இவ்வாணவமோ உயிரின் உள்ளுறை ஆன்மா அன்று. இவ்வான்மாவும் என்றும் அழியவும் படாதது, என்றும் அழியவுமில்லை. இஃது ஊன்றும் அருட்பெருஞ் சோதியின் மூழ்கி ஆநந்தத்தழுந்தி, மேல் நிலையத்தில் அமர்ந்தும், தன்னை யுணராதும் உள்ளதே. ஞானிகளும்

முக்தர்களும் தேகத்துடன் நிற்கினும் உலகைத் துறந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் ஆநந்தத்தை அனுபவிப்பதும், அனுபவ ஞானம் கிடையாது, உணர்வுக்கும் உணர்கின்றேன் என்ற உள்ள வேற்றுமையை உற்றுப்பார்க்கில் அதனுண்மை புலப்படும் பரமான்மாவுடன் ஒன்றானபோது துவைதம் ஒன்று, முக்தியில் ஆன்மா அறியுமாகில், துவைதம் விளங்கும் கேவலநிலையில் அறிவானும் பொருளும் ஒன்றாகி, பொருள் உண்மையாயினும், அது, தனித்துத்தான் உளதென்ற ஞானம் தலைப்படாது.

புத்தர் இப்பரமரகசியங்களில் புகவில்லை. அல்லது சிலர் கூறுவதுபோல், இம்முத்துக்களைப் பன்றிகளுக்கு முன்பேச இயலவில்லை. என்றும்; தீயது விளையவே விளைந்தது அவர் வெளியாகச் சொல்லிய ஒரு பக்கம் மட்டே ஓர் மதமாகி அநேக கோடி ஜனங்களை மயக்கிக் கொண்டிருக்கிறது. அவ்வப் பொழுது நன்மை பயப்பதாயிருந்தபோதிலும் ஒரு பட்சமாகிய உண்மையை உறுதி கூறுவதில் எப்போதும் இழுக்குண்டு. நிர்வாணம் முக்தி வீடு என்ற மொழிப்பிரயோகங்களால் உய்தற்கேது, முக்கியமானது அவா அறுப்பதேயென, இந்து நம்புகின்றான். புத்தன்போல் அத்துடன் நிற்காமல், பாசங் கழன்ற ஆன்மா பதியிற் கலந்து நித்யானந்தத்தை யனுபவிப்பதையும் பகர்கின்றன. பாச க்ஷயமும் பதிஞானமும் காரணகாரிய நிகழ்ச்சி போலொன்றாயினும் இவ்விரண்டும் வேறு வேறு நிலையினையுடையன. பதிஞானம் சிற்றறிவுடைய மனிதன் முயற்சியினாலன்றி பரமேசுவரனது பேரருளினால் கிடைக்கற்பாலது. இதுவும் அரன் பணிநின்று சுயமாக அன்பு பூண்டு ஒழுகலானன்றி கிடைக்கற்பாலதன்று. இவ்விரண்டு அனுபவங்ளில் தாரதம்மியங்களை குருடன் திருஷ்டாந்தத்தால் வேறிடங்களில் விளக்கிக்காட்டி யிருக்கின்றோம். குருடன், மருத்துவன் சிகிற்சையால் கண்ணை மறைத்த படலம் நீங்கிய பின் அக்குற்றத்தினின்றும் நீங்குகின்றான். ஆயின், படலம் நீங்குவது மாத்திரம் அவர் கோரிக்கையாகுமோ; புத்தர் பேறும் அம்மட்டே நிற்கும். படலம் நீங்கிக் கண்ணைப் பெறுவன் ஆனால், இருளிலேயே இருக்க வேண்டும். இது நன்மையாகாது. என்றும் படல நீக்கம் ஒருவித திருப்தியுண்டு பண்ணவுங் கூடும். ஆனால் இவ்வித பலனை முன்னிட்டு ஒருவன் அதிக தூரம்

செல்லமாட்டான். படலம் நீங்கியபின், ஒளியைப் பார்க்கக்கூடாது, இருட்டறையில் என்றுமிருக்கவேணுமென மருத்துவன் பகருவானானால், நல்ல மருத்துவனை யடையவும் அவனுக்கு பெரும்பொருள் கொடுக்கவும் சிகிற்சையால் துன்புறவும் எவன் சம்மதிப்பான். ஏன், படலத்துடனிருப்பது இதற்கு மேலானதாகுமே.

பௌத்தத்திலும் பேர்விளங்கிய நம்மதங்களுள் சிலவற்றிலும், இவ்வித அசந்தர்ப்பத்திலேயே வீழ்த்துகின்றது. இவர்களில் சிலர் முக்தியில் ஒன்றாகும் சமயம், ஆன்மா, அறக்கெடுகின்ற தென்றும் இன்னும் சிலர் முக்தியில் அனுபவமில்லையெனவும் கூறுகின்றனர். மெய்கண்டதேவரால் சிவஞானபோதப் பதினொன்றாம் சூத்திரவர்த்திகத்தில் இக்கூற்றுக்கள் பூர்வப்பட்சப் படுத்தியிருத்தலுங் காண்க. இதனாலே 11ம் சூத்திரத்துக்கும் மேற்கூறிய 10ம் சூத்திரத்துக்கும் உள்ளமுறையும் ஏற்படும். 10ம் சூத்திரத்தில் "இறைபணி நிற்க, மலமாயை தன்னோடும் வல்வினையின்றே" எனப் பாசக்ஷயம் பந்த நிவர்த்தி, பற்றுக்கேட்டைப் பற்றிப் பிரசங்கித்தது, 11ம் சூத்திரத்தில் "அயரா அன்பின்அரன் கழல் செலுமே" எனப் பதிஞானம். பரானுபவத்தைக் குறித்தது. மகாபாரத ஆராய்ச்சியில் பிரசித்திபெற்ற டால்மன்பண்டிதரும் தம், 'நிர்வானம்' என்னும் நூலில், நிர்வானம் என்னும் பொருள் உண்மை புத்தருக்கு முற்பட்டதென்றும், பழைய வேதாந்தத்தினின்றாவது சாங்கியத்தினின்றாவது பிறந்ததல்லவென்றும், இவைகளுக்கும் பழைமையான இந்துமதத்திற் கிடப்பவையென்றும், இவைகளுக்கும் பழைமையான இந்துமதத்திற் கிடப்பவை யென்றும், அதன் கருத்து பிரம்ம நிர்வாணம் பரமான்மாவிற் கலத்தல் என்றும், இந்த உண்மை மகாபாரதத்திலும் கீதையிலும் பரக்கக் காணலாமென்றும் பகர்கின்றனர்; இது சித்தாந்திக்குப் புதிதன்று.

**(தொடரும்)**

# நூல் மதிப்புரை

நூல் : செந்தமிழ்த்தேனீ சோமலெ
ஆசிரியர் : இரா.மோகன்
வெளியீடு : மணிவாசகர் பதிப்பகம்

இந்நூல் ஒன்பது இயல்களில் நூற்று முப்பத்திரண்டு தலைப்புகளில் நூற்று அறுபது பக்கம் விரிந்துள்ளது. அறிஞர் சோமலெ உலகம் முழுவதும் பயணம் செய்து பயணக்கட்டுரை எழுதுபவர் என்றுதான் அவரைப்பற்றி நினைப்போம். ஆனால் செந்தமிழ்த் தேனீ சோமலெயைப்படிப்பவர்களுக்கு அவருடைய பல்வேறு பரிமாணங்கள் சிந்தனைக்கு விருந்தாகும்.

"சோமலெயின் மகன் ஐந்தாம் வகுப்புப்படித்துக் கொண்டிருந்தார். அப்போது சோமலெ சென்னைப் பவளக்காரத்தெரு ரங்கூன் விடுதியில் தங்கிக்கொண்டு, குடும்பத்தினரைத் தமது சொந்த ஊரான நெற்குப்பையில் வைத்துவிட்டு மகனின் எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டுமே என்ற குறிக்கோளுடன், மகனைத் திருவான்மியூர் பெசன்ட் தியாசாபிகல் பள்ளியில் படிக்கவைத்துக்கொண்டிருந்தார்." என்ற செய்தி வித்தியாசமானது. செட்டிப்பிள்ளைகள் திரை கடல் ஓடித் திரவியம் தேடுவதில் ஆர்வம் காட்டுவர். ஆனால் சோமலெயின் வாழ்க்கை கல்விச் செல்வம் பொருட் செல்வத்தினும் தலைசிறந்தது என்ற உணர்வை சிந்திக்க வைக்கிறது. அதனால்தான் தந்தை இறந்தபின்பும் மகன் சோமசுந்தரம் தந்தையிடம் தீராக்காதல் உடையவராகத் திகழ்கிறார். அச்செய்தியை நூலின் பின்வரும் கூற்று உறுதிசெய்கிறது.

"தந்தையார் சென்னை அண்ணாசாலை அஞ்சலகத்தில் இறந்தபோதுகூட எனக்குக் கடிதம் அனுப்பியதுதான் அவர்கள் செய்த கடைசிச்செயல்; தந்தையார் (சோமலெ) இறந்து பல ஆண்டுகளாகி விட்டாலும் இன்னும்கூட தபால்காரர் வரும்போது அவர்களிடமிருந்து கடிதம் வரவில்லையே என்ற ஏக்கம் வருத்தம் என்னுள் எழுவதுண்டு", என்று எழுதுகிறார். மகன் தந்தை உறவு இறுதிக்காலம் வரை சோமலெயைப் பற்றி நின்றது போலவே மகன் சோமசுந்தரத்தின் நெஞ்சிலும் அன்பென்னும் வேர் ஆழமாக ஊன்றியிருப்பதை உணரமுடிகிறது.

சாகித்திய அகாதமிக்காக 1901முதல் 1953 வரைத் தமிழில் வெளிவந்த நூல்களைப்பற்றி விவரத்தொகுப்பு ஒன்றைத் தயாரித்து அளித்துள்ளது. அவருடைய ஐம்பது ஆண்டுகால

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 25328[illegible]

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116